# எங்களைத் தவிக்க விட்டுட்டு, எங்கே போனீங்க... செல்வம் மாமா!

முதல் பக்கத் தொடர்ச்சி

**‘இனி, வர மாட்டார்’ என்று நினைக்கும்போதே நெஞ்சம் கலங்குகிறது.**

கலைஞர் அவர்களின் மூத்தப் பிள்ளையான முரசொலியுடனே வளர்ந்தவர் – முரசொலியை வளர்த்தவர். கலைஞருக்கு முரசொலி மாறன் மாமா மனசாட்சி என்றால், நம் தலைவர் அவர்களுக்குத் தோளோடு தோள் நின்ற கொள்கை வீரர் செல்வம் மாமா.

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் மாமாவின் நெருங்கிய நண்பரான முரசொலி செல்வம் மாமா, கழகப் பொதுச் செயலாளரிடம் எப்படி உரிமையோடு பழகுவாரோ, அதே உரிமையோடுதான் கடைக்கோடித் தொண்டனிடமும் பழகும் பண்பைப் பெற்றிருந்தார். சிறியவர் – பெரியவர் வித்தி யாச மின்றி எல்லோரிடமும் மரியாதையுடன் பேசுகிற வழக்கத்தைக் கொண்டவர் அவர்.

75 ஆண்டுகளைக் கடந்து விட்ட முரசொலியின் நீண்ட நெடியப் பயணத்தில், செல்வம் மாமா பதித்தத் தடங்கள் ஏராளம். ‘முரசொலி’யில் வந்த செய்திக்காக சட்டமன்றக் கூண்டிலேறி நெஞ்சுரத்துடன் பதில் சொன்ன அவருடைய உறுதிதான் இன்றைக்கு எங்களை எல்லாம் வழி நடத்துகிறது. ‘முரசொலி நினைவலை கள்’ என்று அவர் எழுதிய அனுபவங்கள் அத்தனையும் திராவிட இயக்க இளைஞர்களுக்கு வழிகாட்டும் பாடங்கள். ‘சிலந்தி’ என்ற புனைப்பெயரில் முரசொலியில் அவர் எழுதிய கட்டுரைகள் சிரிக்கவும் – சிந்திக்கவும் – சிலிர்க்கவும் வைக்கும்.

என் மீது தனிப்பட்ட முறையில் அக்கறை கொண்டிருந்த செல்வம் மாமா, என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் உடன் நின்று ஆலோசனைகளை வழங்கியவர். இன்றைய முரசொலியில் கூட, என்னைப்பற்றி ஒரு பத்தியை எழுதியிருக்கிறார் என்று எண்ணும் போது அவரது இழப்பைக் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை.

முரசொலியின் நிர்வாக இயக்குநர் பொறுப்பை கலைஞர் அவர்கள் என்னிடம் தந்த போது, என்னை அழைத்த செல்வம் மாமா, “முரசொலியின் பயணமும் – வீச்சும் உனக்குத் தெரியும் உதய். அதை மனசுல வச்சு, பணிகளைச் செய்,”என்று வாழ்த்தினார்கள்.

இளைஞர் அணியின் செயலாளராக நான் பொறுப்பேற்ற போது, ``40 வருஷம் தலைவர் அவர்கள், இளைஞர் அணியை வளர்த்தெடுத்து இருக்காங்க. அப்படிப்பட்ட பெருமைகளைக் கொண்ட இளைஞர் அணியை நீ வழி நடத்துறது வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பு உதய். இதை நீ சரியாகப் பயன்படுத்திக் கொள். சென்னையிலேயே இருந்திடாம தமிழ்நாடு முழுக்க பயணம் பண்ணு. இளைஞர்களைச் சந்திச்சு, அவங்கள எல்லாம் நம் இயக்கத்திற்குள் கொண்டு வா,” என்று உரிமையோடு எடுத்துரைத்தார்.

அதுமட்டுமல்ல, 2019 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் நான் பிரச்சாரத்தில் ஈடுபடுகின்ற போதெல்லாம், ஒவ்வொரு நாளும் என்னுடைய பேச்சுக்களைத் தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு, அவை பற்றி தொலைபேசியில் அழைத்து அவருடைய கருத்துக்களைக் கூறுவார்.

“உன் பிரச்சாரத்தை டி.வி.யில பார்த்தேன் உதய். உன் பேச்சு ரொம்ப எளிமையா, மக்களுக்குப் புரியுற மாதிரி இருக்கு. எல்லாரும் ரசிக்கிறாங்க. ஆகவே, யாரையும் காயப் படுத்தாம பேசு. இயக்கக் கொள்கைகளை இளைஞர்களிடம் உன் பாணியில் கொண்டு சேர்த்திடு உதய். நீ சொல்ற விஷயத்தை எதிர்க்கட்சிக் காரங்களும் கவனிக்கிற மாதிரி, அவங்களும் எடுத்துக்கிற மாதிரிப் பேசு,” என்று வழிகாட்டிய முரசொலி செல்வம் மாமாவின் தொலைபேசி அழைப்புகள், இனி, அறவே வராது என்பதை ஏற்க மனது மறுக்கிறது.

சேப்பாக்கம் – திருவல்லிக்கேணித் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற்று, அவரின் வாழ்த்துகளைப் பெறச் சென்றேன். என் கைகளை இறுகப் பற்றிக்கொண்ட முரசொலி செல்வம் மாமா, “சேப்பாக்கம் – திருவல்லிக்கேணித் தொகுதி, யார், யார் நின்னு ஜெயிச்ச தொகுதின்னு உனக்குத் தெரியும். அவங்களோட பணிகள் நிச்சயம் உன்னை வழிநடத்தும். அதையெல்லாம் மனசுல வச்சு, மக்கள் பணியில உன்னை ஈடுபடுத்திக்க,” என்று அன்போடு வாழ்த்தினார்.

நான் துணை முதலமைச்சர் பொறுப்பினை ஏற்றபோது, கடந்த செப்டம்பர் 28–ஆம் தேதி இரவு என்னை வாழ்த்திய செல்வம் மாமா, “இந்த வாழ்த்து, நீ துணை முதலமைச்சரானதுக்கு இல்ல. இவ்வளவு நாளா செஞ்சப் பணிகளுக்கானதும் இல்ல. இனிமேல நீ என்ன செய்யப்போறன்னு பார்க்கலாம். அதை மனசுல வச்சு பணியாற்று,” என்று உரிமையோடு அவர் சொன்னதுதான், எனக்கான அவருடைய இறுதி அறிவுரை என்பது இப்போதுதான் புரிகிறது.

அண்ணா – கலைஞர் – முரசொலி மாறன் ஆகியோர் வழியில் திரைத்துறையின் வழியாகவும் கொள்கை வளர்த்தவர். முரசொலியின் முகங்களில் முக்கியமானவர். எனினும், இளையோரின் கருத்துக்களை உள்வாங்கிடவும் அவர் தவறியதில்லை.

**இளைஞர் அணி முன்னெடுத்த ‘திராவிட மாடல்’ பயிற்சிப் பாசறைக் கூட்டங்களைக் கவனித்து ஆலோசனைகளை வழங்கியவர். முரசொலியில் இளைஞர் அணி சார்பில் பாசறைப் பக்கத்தைத் தொடங்க வேண்டும் என்று கழகத் தலைவர் அவர்களிடம் அனுமதி கேட்ட போது, ‘முதல்ல முரசொலி செல்வம் அண்ணனைப் பார்த்து, அவரிடம் அனுமதி வாங்கிட்டு வா’ என்றுதான் சொன்னார்கள். அந்த அளவுக்குத் தலைவர் அவர்களின் மதிப்பிற்குரியவராக இருந்தவர் முரசொலி செல்வம் மாமா.**

‘பாசறைப் பக்க’த்தின் தீவிர வாசகர். அதுகுறித்து, தொடர்ந்து பல ஆலோசனைகளை வழங்கி வந்தார். இளைஞர்களை வளர்த்துவிட்டு அழகு பார்ப்பதில், அவருக்கு நிகர் அவர்தான். கழகத்தில் எழுத்து – பேச்சு என்று இளைஞர்கள் மிளிர்ந்தால், உடனே அவர்களை அடையாளம் கண்டு, கலைஞர் அவர்களிடமும், கழகத் தலைவர் அவர்களிடமும் அறிமுகப் படுத்தி வைப்பார். இன்றைக்கு கழகத்தில் உள்ள இளைய முகங்கள் பல செல்வம் மாமாவால் அடையாளம் காணப்பட்டவை.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, இன்றைக்கு இளைஞர் அணி சார்பில், பேச்சுப் போட்டிகளை நடத்துகிறோம். சிறந்த பேச்சாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிகளில் ஏராளமான நடுவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இன்றைக்கு நடுவர்களாக இருக்கும் பலரை அன்றைக்கே அடையாளம் கண்டவர், செல்வம் மாமா.

“நல்லது, கெட்டது எல்லாத்துலயும், இன்னைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் இல்லையே என்ற குறையை எனக்குப் போக்கிக் கொண்டிருப்பவர் நம்முடைய முரசொலி செல்வம் அவர்கள் தான்,” என்று நம்முடைய கழகத்தலைவர் அவர்கள், ‘முரசொலி நினைவலைகள்’ நூல் வெளியீட்டு விழாவில் உருக்கத்துடன் கூறினார்கள்.

கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில், 2019–ஆம் ஆண்டிலிருந்து கழகத்தில் – கழக அரசில் நான் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி வருகிறேன். அதனைக் காண்பதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இல்லையே என்ற வருத்தம் எனக்கிருந்தாலும், கலைஞர் அவர்கள் இடத்திலிருந்து அந்தக் கவலையைப் போக்கிடக் கூடியவராக முரசொலி செல்வம் மாமா அவர்கள்தான் இருந்தார்கள்.

**எதையுமே எளிய மக்களின் பார்வையிலிருந்து அணுக வேண்டும் என்ற `உங்களின் குரல்’ இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது மாமா!**

**கட்டுரை எழுதுவதற்காக நீங்கள் சேகரித்து வைத்திருந்த குறிப்புகளைப் போலவே, நாங்களும் நீங்கள் இல்லாமல் தனியாக நிற்கிறோம், மாமா.**

**எங்களை எல்லாம் தவிக்க விட்டுட்டு எங்கே போனீங்க மாமா!**

**– என்றும் உங்கள் நினைவுகளோடு**

**உதய்.**



## முரசொலி செல்வம்

# நெருக்கடி காலத்தில் முரசொலி தொடர்ந்து வெளிவர காரணமாகத் திகழ்ந்தவர்!

## சென்னை நிருபர்கள் சங்கம் இரங்கல்!

சென்னை, அக்.12 - முரசொலி செல்வம் அவர்களின் மறைவு செய்தியறிந்ததும் சென்னை நிருபர்கள் சங்கத் தலைவர் ஆர்.ரங்கராஜ், செயலாளர் டி.சேகர் ஆகியோர் இரங்கல் தெரிவித்து விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு: -

முரசொலி நாளிதழின் நிர்வாக ஆசிரியராக பல வருடங்கள் பணியாற்றிய முரசொலி செல்வத்தின் மறைவு அதிர்ச்சி அளிக்கிறது. அவர் (நேற்று) காலை பெங்களூரு மருத்துவமனையில் இறந்தார். முரசொலி பத்திரிகையில் பணியாற்றும் போது பல நெருக்கடிகளை, அவசரகாலம் (Emergency) உட்பட, சமாளித்து, அந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர முக்கிய காரணமாக திகழ்ந்தவர்.

இந்த நேரத்தில் இந்த பிரிவால் துயரம் அடைந்த அவரது குடும்பத்தினர், குறிப்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், அவர்களுக்கு சென்னை நிருபர்கள் சங்கம் (Madras Reporters Guild) தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

## அரை நூற்றாண்டிற்கும் மேலாக

# திராவிடக் கருத்தியலைச் சுமந்தவர் முரசொலி செல்வம்!

## மக்கள் நீதி மய்யத் தலைவர் கமல்ஹாசன் இரங்கல்!



சென்னை, அக். 12– “அரை நூற்றாண்டிற்கும் மேலாக திராவிடக் கருத்தியலைச் சுமந்தவர் மறைந்த முரசொலி செல்வம் அவர்கள்!” என்று மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் ஹாசன் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு: –

“என்னுடைய இனிய நண்பர் முரசொலி செல்வம் மறைந்த செய்தி பெரும் துயரத்தை அளிக்கிறது. பத்திரிகை ஆசிரியராக அரை நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாக திராவிடக் கருத்தியலைச் சுமந்தவர். திரைப்படத் துறையிலும் பங்களிப்பாற்றியவர். எல்லாவற்றுக்கும் மேலாக நட்புக்கு மரியாதை அளிக்கிற நல்ல மனிதர். முரசொலி செல்வம் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்”.

இவ்வாறு மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## முரசொலி செல்வம்

# இதழியல் துறையில் துணிவுடன் செயல்பட்டவர்!

## சென்னை பிரஸ் கிளப் இரங்கல்!

சென்னை, அக்.12- ‘சென்னை பிரஸ் கிளப்’ தலைவர் அ.செல்வராஜ், பொதுச்செயலாளர் ச.விமலேஷ்வரன் ஆகியோர் முரசொலி செல்வம் அவர்கள் மறைவுச் செய்தியறிந்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

கலைஞரின் அக்கா மகன், முரசொலி மாறனின் தம்பி, கலைஞர் மகள் செல்வியின் கணவர் என்ற குடும்ப உறவின் பின்னணியையும் தாண்டி தி.மு.க.வின் அறிவார்ந்த சொத்தாகத் திகழ்ந்தவர் முரசொலி செல்வம்.

முரசொலி நாளிதழ் 80 ஆண்டுகளைக் கடந்து தனது பயணத்தில் எதிர்கொண்ட நெருக்கடிகளை, தாக்குதல்களை, கைது நடவடிக்கைகளைத் தொகுத்து ‘முரசொலி சில நினைவுகள்’ என எழுதினார். இதழியல் துறையில் துணிவுடன் செயல்பட ஆர்வமுள்ளவர்களுக்கு அது மிகச் சிறந்த கையேடு ஆகும்.


தனது 82 வது வயதிலும் கொள்கை உறுதி மிக்க பத்திரிகையாளராக செயல்பட்டதுடன், சமூக வலைதளங்களிலும் இளையவர் கள் வெளிப்படுத்தும் கருத்துகளையும் உற்றுக் கவனித்து, அவற்றை முரசொலியில் வெளியிடச் செய்து ஊக்கப்படுத்தியவர். 50 ஆண்டுகால அரசியல் நிகழ்வுகள் குறித்த சந்தேகங்கள் எதுவாக இருந்தாலும் உடனடியாக தெளிவுபடுத்தக் கூடியவர்.

ஆசிரியர் முரசொலி செல்வம் அவர்களின் மறைவால் வாடி நிற்கும் அவரது குடும்பத்தாருக்கும், அரசியல் மற்றும் ஊடகத்துறை நண்பர்களுக்கும் இந்த தருணத்தில் ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இன்றி தவிக்கும் CHENNAI PRESS CLUB உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரின் சார்பிலும் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## முரசொலி செல்வம் மறைவு:

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இரங்கல்!



சென்னை, அக்.12– முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

முரசொலி செல்வம் மறைவுக்கு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், “முரசொலி செல்வம் என்னுடைய நீண்ட கால நண்பர் மற்றும் அருமையான மனிதர்.

அவருடைய மறைவு எனக்கு மிகவும் வருத்தமளிக்கிறது. அவருடைய ஆத்மா சாந்தியடையட்டும். அவருடைய குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கல்”.

இவ்வாறு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் குறிப்பிட்டுள்ளார்.




முரசொலி செல்வம் அவர்கள் மறைவெய்தியதையொட்டி பண்ருட்டி நகர கழகம் சார்பில் பண்ருட்டி நான்கு முனை சந்திப்பு அண்ணா சிலை அருகில் வைக்கப்பட்டுள்ள முரசொலி செல்வம் அவர்களது திருவுருவ படத்திற்கு பண்ருட்டி நகர மன்ற தலைவர், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில், கடலூர் மேற்கு மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலையில் மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

# முரசொலி செல்வம் மறைவு!

## பிரசிடெண்ட் அபூபக்கர் இரங்கல்!

சென்னை, அக். 12 - முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பிரசிடெண்ட் அபூபக்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கலைஞர் காலம் தொடங்கி எங்கள் குடும்ப நண்பர் முரசொலி செல்வம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தேன்.

எல்லா காலகட்டங்களிலும் கட்சிக்கும், முரசொலிக்கும் பக்க பலமாய், தக்க துணையாய் நின்றவரை இழந்து வாடும் முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.